**தலைப்பு - 202 - முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எமும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

---------------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியதாக உள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன

**2. நிதி மீளாய்வு**

--------------------

**2.1 செலவின முகாமைத்துவம்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவின விடயங்கள் 11 இற்கு தொடர்புடையதாக கூட்டுத்தொகை ரூபா 49,000,000 ஆன நிதியேற்பாடுகளில் ரூபா 16,721,479 ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அச் சேமிப்பு 24 சதவீதம் தொடக்கம் 72 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள், கொவிட் தொற்று நிலையின் காரணத்தினால் செயற்படுத்தல் தாமதமாகியது. அதற்கு மேலதிகமாக அமைச்சரவை தீர்மாளத்தின் பிரகாரம் கட்டாய சேமிப்பாக கருதி பொது திறைச்சேரிக்கு அறிக்கையிடப்பட்டது. | பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியேற்பாடு குறித்த பணிகளுக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | செலவின விடயம் 2003 இற்குரிய தேறிய நிதியேற்பாடு ரூபா 800,000 எனினும் மொத்த செலவு ரூபா 249,857 ஆகியமையினால் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 700,000 ஆன நிதியேற்பாடு கைவிடப்பட நேர்திருந்தது. | 2003 இன் கீழ் கட்டாய சேமிப்பு ரூபா 700,000 என குறிப்பிடப்படினும் அதன் பின்னர் அத்தியாவசிய பில்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் நிதியேற்பாடு எல்லை மிகைத்திராததுடன் இறுதி கணக்குகளில் 2003 செலவின விடயத்தின் கீழ் சேமிப்பு ரூபா 550,143 என காண்பிக்கப்படுகின்றது. | தேவையின் பிரகாரம் நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூ | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1982 இன் 33 ஆம் இலக்க வகுப் சட்டத்தின் 4 ஆம் அதிகாரம் | | | | |
| | (i) 43(2) ஆம் பிரிவு | | பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பள்ளிவாயில், தர்ம நம்பிக்கை பொறுப்பு என்பவற்றின் வருடாந்த தேறிய வருமானத்தில் 6 சதவீதமும், ஒரு முஸ்லிம் வணக்க ஸ்தலமொன்றின் வருடாந்த தேறிய வருமானத்தில் 10 சதவீதமும், முஸ்லிம் தர்ம நிதியத்திற்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குறித்த பள்ளி மற்றும் வணக்க ஸ்தலத்திலிருந்து நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கு பரீட்சிக்கும் முறையொன்று அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முஸ்லிம் தர்ம நிதியத்திற்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய தர்ம நிதி அளவு பரீட்சிப்பதற்காக தற்போது முறைமையொன்று அறிமுகப்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதுடன் அம் முறைமை செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம் முறைமையொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) 43(8) ஆம் பிரிவு | | நிதியத்தின் கணக்கு பேணிச் செல்வதற்கு மற்றும் கணக்காய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை கணக்குகள் தயாரிக்கப்பட்டு வகுப் சபையின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட உடனே கணக்காய்விற்கு முன்வைக்கப்படும் என தெரிவித்துக் கொள்கின்றேன். | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| | (i) நிதி பிரமாணம் 214 | 668,508 | மீளாய்வாண்டிற்குரிய பொறுப்புக்களானது, பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பொறுப்பு, பொறுப்பு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் பிரகாரம் பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| | (ii) நிதி பிரமாணம் 396 | 324,702 | வழங்கப்பட்டு 06 மாதங்களினை கடந்திருப்பினும் வைப்புச் செய்யப்படாத 11 காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 6 மாதங்களினை கடந்த ரூபா 324,702 பெறுமதியான காசோலைகள் விரைவாக அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கான பிரயோக சிக்கல் காணப்படுகின்றமையினால் தற்காலிகமாக வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் சிக்கல் தீர்க்கப்பட்டு அனைத்தும் 2022 திசெம்பர் 31 | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திகதிக்கு பின்னர் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | |
| (இ) | 2006 திசெம்பர் 22 திகதிய பிஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படுகின்ற ஹஜ் நிதியம் பாராளுமன்றத்தின் சட்டம் ஒன்றின் ஊடாக சட்ட ரீதியாக தாபிக்கப்பட்டிராததுடன் சுற்றறிக்கை பிரகாரம் நிதியம் மூடப்படுவதற்கு அல்லது சட்டரீதியான நிலையினை பெற்றுக் கொள்வதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதியத்திற்கு உரிய நிதிக் கூற்றுக்கள் இதுவரையில் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டு வரை நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டுப்பாட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டிரா-ததுடன் 2021 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் நிதியத்தின் மொத்த சொத்து ரூபா 139.9 மில்லியனாக காணப்பட்டது. | ஹஜ் நிதியத்திற்கு உரியதாக 2021 ஆம் ஆண்டு வரை நிதிக் கூற்றுக்கள் தயாரித்து கட்டுப்பாட்டு சபை அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. அவ் அங்கீகாரத்தின் பின்னர் கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2015 யூன் 29 திகதிய 01/2015 ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 14 திகதிய 4/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | குறித்த சுற்றறிக்கைளுக்கு முரணாக விலைமனு அழைக்கப்படாது திணைக்களத்திற்கு சொந்தமான WP CAD - 9010 மற்றும் WP KC - 5063 இலக்கங்களைக் கொண்ட 02 வாகனங்கள் செலின்கோ காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. | மிக விரைவாக காப்புறுதி செய்யும் தேவை அடிப்படையில் மற்றும் கொவிட் தொற்று நிலையின் காரணத்தினால் விலைமனு அழைப்பதற்கு தாமதமாகின்றமையினால் விலைமனு அழைக்கப்படாது | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இவ் வாகனங்கள் இரண்டும் காப்புறுதி செய்யப்பட்டது. | |
| (உ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| | (i) 3.1 ஆம் பிரிவு | அனைத்து எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத கால கட்டத்தில் அல்லது 25,000 கி.மீ தூரம் ஓடப்பட்டதன் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பான பழுதுபார்த்தலின் பின்னர் அல்லது போன்ற காரணங்கள் இடையே முதலாவது வரும் சந்தர்ப்பத்தில் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை விரைவாக மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 3.3 ஆம் பிரிவு | எரிபொருள் பயன்பாட்டினால் பாதகமாக வித்தியாசம் இருக்குமெனில் அதை அடையாளப்படுத்துவதற்காக சுற்றறிக்கையின் பிண்ணினைப்பு 01 இல் காண்பிக்கப்பட்டுள்ள போக்குவரத்து சேவைகள் குறிப்பு மாதாந்தம் நிரப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டி-ருக்கவில்லை. | போக்குவரத்து சேவைகள் குறிப்பு மாதாந்தம் குறிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் பதவியணி அங்கத்தவர்களினால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய திறன்கள் மற்றும் காணப்படுகின்ற திறன்கள் இடையேயான இடைவெளியினை | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றதுடன் எதிர்வரும் இரு மாதங்களினுள் அது பூர்த்தி | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தீர்ப்பதற்காக மனிதவள அபிவிருத்தியினை ஆய்வு செய்து திணைக்களத்திற்குரிய தனி மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன். |

## 2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

-----------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடமாற்றம் பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 70,504 ஆன, ஓய்வு பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 55,448 ஆன மற்றும் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 31,900 ஆன கடன் பணம் 05 ஆண்டுகள் மிகைத்திருப்பினும், அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல சந்தர்ப்பங்களின் போது பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பினும் கடன் மீதி அறவிடப்பட முடியவில்லை. இன்னுமாக அது தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு பொருளாதார ரீதியாக பயனுறுதி அற்றதென்பதனால் கடனை பதிவழிப்பதற்கு திறைச்சேரியிடமிருந்து மீள கோருவதற்கு எதிர்பார்க்கின்றேன். | கடன் மீதியினை விரைவாக அறவிபட்பட வேண்டும். |

## 2.4 வைப்புக்கள்

-------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 ஆண்டுகள் தொடக்கம் 06 ஆண்டுகள் வரையான காலமாக காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 17,422,508 ஆன 17 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வைப்புக்கள் இந்த கட்டிடம் கட்டுமானத்திற்குரிய நிறுத்தி வைக்கப்பட்ட பணமாகும். கட்டிடத்தின் பணிகள் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டிராமையினால் குறித்த ஒப்பந்த ஆலோசனை நிறுவனமான அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் பரிந்துரை செய்யப்பட்டிராமையினால் அப் பணம் விடுவிப்பதற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முடியாததென தெரிவிக்கின்றேன். | விரைவில் பரிந்துரை பெற்றுக் கொண்டு குறித்த வைப்பு பணத்தினை விடுவிப்பதற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------

### 3.1 திட்டமிடல்

----------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படுகின்ற ஹஜ் நிதியத்திற்காக மீளாய்வாண்டிற்காக 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 -2020 ஆண்டுகளில் ஹஜ் வழிபாடு மேற்கொள்ளப்பட்டிராமையினால் 2021 ஆம் ஆண்டில் ஹஜ் நிதியத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற நிலைமைகளின் அடிப்படையில் மாற்றமடையப்படக் கூடியதெனினும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.2 சொத்து முகாமைத்துவம்

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினை நடத்திச் செல்கின்ற கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணி திணைக்களத்தின் பெயருக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கு இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றுக் கொடுக்கப்படுள்ள புகையிரத திணைக்கள காணி மிக விரைவாக கையகப்படுத்தல் பிரயோக ரீதியில் மிகவும் கடினமானதுடன் இது தொடர்பில் அமைச்சுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | கையகப்படுத்தல் நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

--------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 880 பிரகாரம், அரச உத்தியோகத்தர்களின் பிணை கட்டளை சட்டத்திற்கு அமைவாக பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களினால் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை கட்டளை சட்டத்தின் பிரகாரம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

-----------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைப்பேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய ஒன்றியத்தின் 2030 ஆண்டின் நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களை அடையாளப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்கள குழுவொன்று நியமிக்கப்பட்டு அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்தி இந்த திணைக்களத்திற்குரியதாக நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களை அடையாளப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். | நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களை அடையாளப்ப டுத்தல் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

---------------------

### 5.1 உள்ளக கணக்காய்வு

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (ஊ) பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பணியினை முறையே செயற்படுத்துவதற்கு பயனுறுதிமிக்க முறைமையொன்று உள்ளமை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தல் வேண்டும். நிதி பிரமாணம் 133 பிரகாரமும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதி பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் நிறைவேற்றுவதற்காக தம் திணைக்களத்தினுள் உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென தெரிவிக்கின்றேன். | கணக்காய்வுச் சட்டம் மற்றும் நிதி பிரமாணம் பிரகாரம் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளல் வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 123 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இற்கு உள்ளவாரான பதவியணி 109 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் பதவியணியின் வெற்றிடம் 25 மற்றும் மிகை 11 ஆக காணப்பட்டது.<br><br>அதில் உதவி பணிப்பாளர் பதவிகள் 04 உம், கணக்காளர் மற்றும் உள்ளக கணக்காளர் பதவிகள் இரண்டும் வெற்றிடமாக காணப்படல் திணைக்களத்தின் செயலாற்றலுக்கு தாக்கத்தினை ஏற்படுத்துமென அவதானிக்கப்பட்டது. | பதவியணியில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் மிக விரைவில் நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஓட்டுனர் பதவிகள் 04 காணப்படினும், மூன்று ஓட்டுனர்கள் மட்டும் சேவையில் காணப்பட்டமையினால் ஒரு வெற்றிடம் காணப்பட்டது. மேலும், 06 வாகனங்கள் காணப்படினும், 03 ஓட்டுனர்கள் மட்டும் காணப்படுகின்றமையினால் தொடர்ச்சியாக 03 வாகனங்கள் குறைபயன்பாட்டுடன் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | ஓட்டுனர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டேன். | ஓட்டுனர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வாகனங்கள் பயன்பாட்டினை வினைத்திறனாக மேற்கொள்ளல் வேண்டும். |